# DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C.** 105/2019

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-1/Lw-1 |
| Name | : | Mr. ஜெய்துண் பீவி |
| Father Name | : | அப்துல் அஜிஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் ஹவுசிங் யூனிட்டில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்துள்ளேன். 5.11.2018 ம் தேதி அன்று மாலை 7 மணிக்கு முதல் எதிரி அசாருதீன் என்னுடைய மகள் குடியிருந்து வந்த வீட்டிற்கு வந்தார். அந்த வீட்டில் இருந்து என் மகன் பாபு படுத்திருந்தார். முதல் எதிர் அசாருதீனுடன் என் மகன் பாபு தகராறு செய்துள்ளான். அதன் பிறகு தான் வீட்டில் வந்து படுத்து இருந்துள்ளான். அப்போது அங்கு வந்த முதல் எதிரி என்னுடைய மகனைப் பார்த்து தேவுடியபையன் என்று திட்டினார். என் மகன் எதற்கு அவ்வாறு

சொன்னாய் என்று கேட்டு வெளியே வந்துள்ளான். அப்போது முதல் எதிரி என்னுடைய மகனை கன்னத்தில் அடித்து விட்டார். எதற்கு அடிக்கிறாய் என்று என் மகன் கேட்டு வெளியே வந்த போது ஆஜர் மற்ற எதிரிகள் எல்லோரும் சேர்ந்து அடித்து தள்ளிவிட்டார்கள். நான்கு பேரும் சேர்ந்து என் மகன் பாபுவை இழுத்து ரோட்டுக்கு கொண்டு வந்து விட்டார்கள். என் மேல் கையை வைக்கிறாயா என்று முதல் எதிரி அசாருதீன் சொன்னார். அப்போது எதிரி அசாருதீன் மற்றும் முகமது அப்பாஸ் மகன் சிராஜுதின் கத்தியை எடுத்து கழுத்து, முகம் ஆகிய இடத்தில் வெட்டி விட்டார்கள். அதன் பிறகு எதிரிகள் சாதிப்பாஷா மகன் சிராஜுதீன் மற்றும் முகமது நபி ஆகியோர் மற்ற இரண்டு எதிரிகளிடம் இருந்து கத்தியை வாங்கி என்னுடைய மகன் பாபுவின் தலையில் வெட்டினார்கள். அப்போது நான் தடுக்கச் சென்றேன். சிராஜுதினும், அசாருதீனும் என்னை கத்தியால் கையில் வெட்டினார்கள்.

2. நானும், என் மகனும் ரத்தம் வந்ததால் மயக்கம் அடைந்து விட்டோம். அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆட்டோவின் மூலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என் மகன் பாபுவை முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள். எனக்கு திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். அரசு மருத்துவமனைக்கு போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் தான் என்னிடம் பெற்றது. அதில் உள்ள கையொப்பம் என்னுடைய இதுதான் அந்த வாக்குமூலம் அ.சா.ஆ–1. வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜராகி இருந்தார்கள் வழக்கறிஞராக இல்லை வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.12 18:37:47 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C.** 105/2019

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW- 2/Lw-4 |
| Name | : | Mr. முஸ்தஃப பாபு |
| Father Name | : | சிக்கந்தர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்போது வெங்கடேஸ்வரா நகரில் வசித்து வந்து ஜாப் கம்பெனி வைத்துள்ளேன். 5.11.2018 ம் தேதி அன்று ஒரு டெய்லரை அழைப்பதற்காக பெரிய தோட்டம் 7 வது வீதிக்கு மாலை 7.00 மணிக்கு சென்றேன். அப்போது அங்கு கூட்டமாக இருந்தார்கள். சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் என்னை நோக்கி நான்கு நபர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் என்னை தாண்டி ஓடி சென்ற பிறகு

நான் கூட்டமாக இருந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது. கீழே சையத் பாபு என்ற நபர் விழுந்து கிடந்தார். வெட்டுப்பட்டு விழுந்து கிடந்தார். என்னவானது என்று கேட்டபோது போன் விஷயத்தில் டிஸ்ப்ளே உடைந்ததால் வாக்குவாதம் ஏற்பட்டு வாக்குவாதம் முற்றி கைகளப்பு இருந்தது மண்டை முழுவதும் வெட்டு பட்டு இருந்தது அதன் பிறகு வெட்டுப்பட்டவரின் அம்மாவும் பாபுவையும் அழைத்துக் கொண்டு ஆட்டோவில் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பிறகு நான் வந்து விட்டேன். 7ம் தேதி திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் அழைத்தார்கள். திண்டுக்கல்லில் இரண்டு எதிரிகள் உள்ளார்கள் அங்கு செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். போலீசார் ஜிப்பில் வந்தார்கள். நானும் அவர்களுடன் சென்றேன். அப்போது எங்களுடன் பக்ரூதீன் என்பவரும் வந்திருந்தார். அதிகாலை ஒரு மணிக்கு மேட்டுப்பட்டி என்ற இடத்தில் கோயிலுக்கு பக்கத்தில் ஒரு வீடு இருந்தது கோயில் பெயர் ஆரோக்கிய மாதா என்று இருந்தது. போலீசார் அந்த வீட்டிற்கு சென்று தட்டி அங்கிருந்து இரண்டு நபர்களை அழைத்து வந்தார்கள்.

2. சம்பவத்தை செய்த நபர்கள் அந்த இரண்டு நபர்களும் என்று கேட்டார்கள். நான் அதற்கு ஆமாம் என்று போலீசாரிடம் அப்போது சொன்னேன். ஒருவர் பெயர் சிராஜுதின் இன்னொருவர் பெயரும் சிராஜுதின். அப்போது போலீசார் அந்த இரண்டு நபர்களிடம் விசாரணையை மேற்கொண்டார்கள் அந்த இரண்டு நபர்களும் சம்பவத்தை செய்ததாக அப்போது போலீசாரிடம் சொன்னார்கள். அப்போது அந்த இரண்டு நபர்களும் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். சம்பவத்தின் போது பயன்படுத்திய கத்தியை பற்றி போலீசார் அந்த நபர்களிடம் விசாரித்த போது அந்த நபர்கள் இருவரும் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ரோட்டில் சங்கிலி பாலம் என்ற இடத்தில் இருப்பதாகச் சொன்னார்கள் அதனால் போலீசார் உடன் நாங்களும் அந்த இடத்தில் இருந்து திருப்பூருக்கு வந்தோம். காலை 6.30 மணிக்கு காவல் ஆய்வாளர், இரண்டு காவல் அதிகாரிகளுடன் இரண்டு எதிரிகளும், என்னுடன் பக்ரூதினும் சங்கிலி பாலம் இடத்திற்கு சென்றோம்.

3. அப்போது ஆஜர் மூன்றாவது எதிரி சங்கிலி பாலத்தில் இருந்து ஒரு மீன் வெட்டும் கத்தியை எடுத்து வந்து போலீசாரிடம் கொடுத்தார். அதன் பிறகு இரண்டாவது எதிரி இன்னொரு கத்தியை சங்கிலிபாலத்திற்கு கீழ் இருந்து ஒரு கத்தி எடுத்து வந்து காவல் அதிகாரியிடம் கொடுத்தார். காவல் அதிகாரிகள் அதை வாங்கி வைத்துக்

கொண்டார்கள். கத்தியை என்னிடம் காட்டினார்கள் அப்போது என்னிடம் ஒரு ஆவணத்தில் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தான் திண்டுக்கல்லில் இரண்டாவது எதிரி சிராஜுதீன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.2 ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். இரண்டாவது சாட்சியாக பக்ரூதின் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தான் மூன்றாவது எதிரி சிராஜுதீன் திண்டுக்கல்லில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். அதில் நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். இரண்டாவதாக பக்ரூதின் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–3.

4. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த ஆவணம் திருப்பூருக்கு வந்து சங்கிலி பாலத்திற்கு அருகில் கத்திகள் எடுத்து ஆஜர் செய்த போது தயார் செய்த ஆவணமாகும்.அந்த ஆவணம் கைப்பற்றுதல் மகஜர். அது அ.சா.ஆ–4 மற்றும் 5. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மீன் வெட்டும் கத்தி ச.பொ.1 இன்னொன்று சூரி கத்தி ச.பொ.2. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 4 எதிரிகள் ஆஜராகி இருந்தும் வழக்கறிஞர் ராஜராககவில்லை வாய்ப்பு வழங்கப்பட்டு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.12 18:37:55 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.